தரத்திலும்
மணத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே
தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12 போன்: 5830

Regestered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (22-9-65) இதழ் 222

விசுவாவசு புரட்டாதி 6 ஜ: அவ் பிறை 25 புதன்கிழமை

சிறந்த புளொக் தயாரிப்பாளர்
Quality
BLOCK
MAKERS
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

சீனப்பகுதிக்குள் 4 கிலோமீட்டர் புகுந்து

# இந்திய துருப்புகள் சுட்டதாக குற்றச்சாட்டு

## பீகிங்கின் புதிய எச்சரிக்கை

### சிக்கிம், லடாக்கில் சீனர்கள் தொடர்ந்து சுடுகின்றனர்கள்

புதுடில்லி, செப். 21

**இன்று சீனு அனுப்பியுள்ள புதிய ராஜதந்திரக் குறிப்பொன்றில் லடாக்கிலுள்ள டெம்சோக் பகுதியில் இந்தியத் துருப்புக்கள் 4 கிலோமீட்டர் தூரம் சீன எல்லைக்குள் புகுந்து, சீனப் பிரஜைகளை கண்மூடித்தனமாகச் சுட்டதாயும் சீனர்கள் திருப்பிச்சுடவேண்டி ஏற்பட்டதென்றும் குற்றஞ்சாட்டியிருக்கிறது.**

1962-ம் ஆண்டுக்குப்பின் இந்தியா மேற்கொண்ட மிகப்பெரிய ஆத்திரமூட்டும் நடவடிக்கை இதுதான் என்றும், இதனுல் ஏற்படும் பெரும் விளைவுகளுக்கு இந்தியா உள்ளாக வேண்டும் என்றும் சீனக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்தியா மீது தாக்குதல் நடத்துவதற்கு முன், ஒவ்வொரு தடவையும் இது போன்ற ராஜீயக் குறிப்பு அனுப்புவது சீனுவின் வழக்கம் என டில்லியில் அதிகாரி ஒருவர் கூறினுர். இது சீனுவின் பழைய தந்திரம் என்றும் இந்தியா மீது தாக்குதல் நடத்துவது அல்லது பாதுகாப்புசபையில் பாகிஸ்தானுக்கு அதிக சாதகத்தை ஏற்படுத்துவது இரண்டிலொன்றுதான் புதிய சீனக் குறிப்பின் உத்தேசம் என்றும் அவர் கூறினுர்.

இதற்கிடையில் பாதுகாப்புசபையின் யுத்த நிறுத்த தீர்மானத்தை ஏற்க வேண்டாம் என சீனு பாகிஸ்தானை பகிரங்கமாகக் கேட்டு ஒலிபரப்பிவருகிறது.

தேங்டாக்கிலிருந்து கிடைக்கும் செய்திகளின்படி, இன்று காலை 8-30 க்கு சீனர்கள்கண்மூடித்தனமாக சுட்டனர்என்றும், தங்கள் நடவடிக்கைகளைக் கவனிக்காமலிருக்கும்பொருட்டு எதிரேயுள்ள இந்தியத் துருப்புக்களைப் பின்னல் தள்ளுவதே இதன் உத்தேசம் என்றும் கூறப்பட்டது.

சீனு, லடாக்கிலும், சிக்கிம்மிலும் பாரத நிலைகள் மீது தானே சுட்டுவிட்டு, பாரதத் துருப்புக்கள் தனது பிரதேசத்தில் ஊடுருவல் செய்ததாகக் குற்றஞ்சாட்டி வருகிறதென்று அறிவிக்கப் பட்டது.

சீனுவின் புதிய குறிப்பு டில்லிக்கு கிடைக்கு முன்பே பீகிங் ரேடியோ அதை ஒலிபரப்பிவிட்டது.

இந்தியத் துருப்புக்கள் சிக்கிம் எல்லையில் திபேத்துக்குள் 4 கிலோ மீட்டர் ஊடுருவல் செய்ததாகக் கூறுவது பொய்க் குற்றச்சாட்டு என இந்தியப் பிரதமர் மறுத்தார். சீனப் பிரதேசத்திற்குள்ளே செல்லவேண்டாமென துருப்புக்களுக்குக் கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாயும் அவர் தெரிவித்தார். லடாக் கோட்டுக்கு இந்தப் புறத்திலேயே இந்தியத் துருப்புக்கள் இருப்பதாயும், சீனத் துருப்புக்கள்தான் ராணுவ சூன்யப் பிரதேசத்தில் 20 கிலோ மீட்டர் தூரம் வந்திருப்பதாயும் அவர் கூறினுர்

## "தமிழ் சமுதாயத்தின் நிலை ஒரு பல்கலைக்கழகத்தினுல் உயர்ந்துவிடுமா?"

### கல்லூரி விருந்தில் மந்திரி பேச்சு

கோப்பாய், செவ்வாய்

''தமிழ் மாணவர்களுக்கான ஒரு தனிப் பல்கலைக் கழகம் வேண்டும் என்ற அடிப்படையில் எனக்கு மிகுந்த சிரத்தையுண்டு. தமிழ்ப் பல்கலைக் கழகம், நாவலர் கழகம் என்பவற்றிற்காக நானும் எனது நண்பர்களும் தீவிரமாக உழைத்துள்ளோம். ஆனல் தமிழ் சமுதாயத்தின் நிலை ஒரு தனியான பல்கலைக் கழகத்தை நிறுவினுல் உயர்ந்துவிடுமோ என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இன்று 800 தமிழ்ப்பட்டதாரிகள் வேலையின்றி இருந்து வருகின்றனர்' என்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர் மன்ற வருடாந்த விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:- நமது மாணவர்கள் பொருளாதார தொழிற்றுறைக் கல்விகளிலேயே அதிகம் நாட்டமுடையவர்களாக இருக்க வேண்டும் வெறும் பட்டதாரிகளாவதால் எவ்வித பயனும் கிடைக்கப் போவதில்லை. தமிழ்மக்கள் மத்தியில் உள்ள பிரமுகர்களும் பெருந்தொழில் முயற்சிகளில் ஈடுபட முன்வரவேண்டும்.''

மந்திரியை வரவேற்றுப் பேசிய கல்லூரி ஆசிரியர் திரு. ஆர். எஸ். கந்தசாமி தமிழ்மாணவர்கள் உயர்தரக்கல்வி பெற வேண்டுமானுல் தமிழருக்கு ஒரு சர்வகலாசாலை போதாதெனவும், தமிழ் மாணவர்களுக்காக ஒரு தனிப்பல்கலைக்கழகம் வேண்டும் என்றும் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

கோப்பாய் பிரதிநிதி திரு. சி. கதிரவேற்பிள்ளையும் வைபவத்தில் கந்து கொண்டார்.

## பூநகரி கொலைவழக்கில் எதிரி விடுதலை

### ஜூரிசபையின் தீர்ப்பில் நீதியரசர் அதிருப்தி

யாழ்ப்பாணம், புதன்

'நீர்தான் சுட்டிருக்கிறீர் என்பது தெளிவாகத்தெரிகிறது' என்று பூநகரிக்கொலை வழக்கில், எதிரியை விடுதலை செய்துதீர்ப்பளிக்கும்போது நீதியரசர் எச்.டபிள்யு. தம்பையா கியூ. ஸி கூறினுர்.

பூநகரி கொலைவழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் கடந்தஇருதினங்களாக விசாரணை செய்யப்பட்டது. இவ்வழக்கின் தீர்ப்பை அறிவதற்கு நீதி மன்றத்திற்குள் மக்கள் திரண்டிருந்தனர்

இவ்வழக்கில் 64-ம்ஆண்டு மார்ச் மாதம் 27-ந் திகதி பூநகரியைச் சேர்ந்த பொன்ஞவெளியில் நாகலிங்கம் கணேசன் என்பவரைச் சுட்டுக் கொலை செய்ததாக ஆறுமுகம் சதாசிவம் என்பவர்மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

சுமார் ஒரு மணித்தியால மந்திராலோசனையின் பின் ஜூரிசபையினர் எதிரி குற்றவாளியல்லவென 5—2ஆகத் தெரிவித்தனர்.

நீதியரசர்தீர்ப்பளிக்குமுன் தெரிவித்ததாவது: நீர் ஒரு அதிஷ்டசாலியானபடியால் இப்படியானதீர்ப்பு கிடைத்துள்ளது. உமது வளவிற்கு வெளியில் வந்து சுட்டிருக்கிறீர் என்பது தெளிவு. நீர் சுடவேணுமென்ற நோக்கமில்லாமல் சுட்டிருக்கலாம். நீர்தான் சுட்டிருக்கிறீர்

ஜூரிமாரில்லாத நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தால் கைமோசக் கொலைக் குற்றச்சாட்டில் குற்றவாளியாகியிருப்பீர். இப்படியான பிழைகளைக் கண்டுதான் ஜூரிமார் கொண்டு வழக்குகள் விசாரணை செய்யப்படுவதை நிறுத்தவேண்டுமென்ற அபிப்பிராயம் கொள்ளக்கூடியதாயிருக்கிறது. ஜூரிசபையினர் உம்மை நிரபராதியாக கண்டிருக்கிருர்கள். இந்தமாதிரி இனிமேல்செய்யக்கூடாது. அதிஷ்டம் இனி மேல்வராது.

எதிரிசார்பில் அட்வக்கேட் திரு ஏ.சம்பந்தன அட்சகேட் திரு எஸ். ஸ்ரீனிவாசனின் உதவியுடனும், திரு.எஸ். அம்பலவாணரின் அனுசரணையுடனும் ஆஜராஞர். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் திரு மோதிலால்நேரு நியமிக்கப் பட்டிருந்தார்.

## மந்திரி வரவில்லை; மகாநாடு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 25-ந் திகதி காலை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் ஆரம்பமாகவிருந்த வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை வருடாந்தக்கூட்டுறவு மகாநாடு அடுத்தமாதம் 30-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இம்மகாநாட்டை ஆரம்பித்து வைப்பதற்கிருந்த கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன தாம்இப்பொழுது வரமுடியாதிருப்பதாக அறிவித்திருப்பதைத் தொடர்ந்தே மகாநாடு அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப் படுகிறது.

## "சாகவேண்டுமென்று நான் அடிக்கவில்லை"

— காளிமுத்து

### கூழாவடி கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், செவ்

கூழாவடி கொலைவழக்கில் எதிரியான காளிமுத்து, வைத்தியநிபுணர் டாக்டர் நவரத்தினத்தை நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் குறுக்கு விசாரணை செய்தார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை நீதிபதி திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கொழும்பிலிருந்து வந்த வைத்திய நிபுணர் டாக்டர் நவரத்தினமும், டாக்டர் ஸ் சுப்பிரமணியமும் சாட்சியமளித்தார்கள்: எதிரியான காளிமுத்து, சாட்சியமளித்த டாக்டர்களைக் குறுக்குவிசாரணைசெய்தார்.

இவ்வழக்கில் கதிரவேலு காளிமுத்து என்பவர் திருமதி ராஜமார்த்தாண்டன் என்பவரைக் கொலைசெய்ததாகவும் திருமதி தேவராஜன் என்பவரைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது

எதிரி காளிமுத்து தரப்பில் எவரும் ஆஜராகவில்லை. பொலிஸ்தரப்பில் ஆனைக்கோட்டைப்பொலிஸ் இன்ஸ்பெக்டர், திரு ஜிம்மி ராஜரத்தினத்தின் உதவியுடன் வழக்கை நடத்தினுர்.

விசாரணையைப் பார்ப்பதற்கு பெண்களுட்பட நீதிமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் மக்கள் திரண்டிருந்தனர் காளிமுத்துவின் பெயர் கூப்பிடப்பட்டதும் அவர் நேராகக் கூண்டில் வந்து ஏறி நின்ருர். வெள்ளைச்சாரமும், அரைக்கை பெனியனும்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சத்தியம் நேர்மை இவற்றைவிட மேலான மதம் இல்லை, உண்மையான சமயமும் உண்மையான ஒழுக்கமும் பிரிக்கமுடியாதவை. மண்ணில் விதைக்கப்பட்ட வித்திற்கு நீர் எப்படியோ அது போல ஒழுக்கத்திற்கு மதமுமாகும். —மகாத்மா

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு புரட்டாதி மீ 6 உ (22-9-65)

## மாணவர் ஒழுக்கமுள்ளவர்களே!

பாடசாலைகளில் மாணவர்கள் தொகை அதிகரித்துள்ளமையும், போதிய தொழில் வாய்ப்புகளின்மையுமே மாணவர் மனதில் தோல்வி மனப்பான்மை தோன்றுவதற்கும், அரசியல் செல்வாக்கும் மாணவர் மனதில் ஒழுக்கவீனம் அதிகரிக்க முக்கிய காரணமென்றும் இந்த விஷயத்தில் ஆசிரியர்களும் குற்றவாளிகளேயென்றும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் தமது கல்லூரியின் பரிசளிப்புவிழாவில் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேடைப் பேச்சாளர்களும், அறநெறிப் பேச்சாளர்களும் மாணவர்களைக் கண்டிப்பதை இன்று ஒரு நாகரிகமாகக் கருதி வருகின்றனர். ஆனால் இவ்விஷயத்தை முறையே மேலைத்தேச நாடுகளிற் போல் தக்க அறிவாளிகள் அல்லது இளைஞர் நடைமுறை வழக்கத்தை ஆராயும் கமிஷன் எங்கள் நாட்டில் ஆராய்ந்து முடிவு சொல்லவில்லை. இச்சந்தர்ப்பத்தில் எங்கள் மாணவர் மாணவிகளை பொதுவாகக் குற்றம் சாட்டுவது முறையற்றது.

முதலாவதாக எங்கள் பண்டைய பண்பாட்டின்படியும் அறநெறிகளின்படியும் நடப்பதில்லையெனக் குற்றம் சாட்டுவது சரியல்ல. வளர்ந்தவர்கள், உத்தியோகத்தர்கள், செல்வந்தர்கள் எல்லோரும் பண்பாட்டைக் கைவிட்டு நவீன நாகரிகத்தைக் கடைப்பிடித்து நடக்கின்றனர். பெற்றோரும் ஆசிரியர்களும் பாடசாலை அதிபர்கள் தன்னும் நவீன நாகரிகத்தைப் பின்பற்றும் இக்காலத்தில் மாணவ மாணவியரை மட்டும் சிக்கனமாக பழைய பண்பாட்டையும் அறநெறிகளையும் பின்பற்றி நடக்கவில்லையெனக் கூறுவது நியாயமாகாது.

அந்தக் காலம் ஒழிந்தது. நடப்பது இந்தக் காலம் என்பது ஓர் நகைச்சுவை மொழியல்ல; இது ஒரு பெரும் உண்மை. அந்தக் காலத்தில் ஆசிரமக் கல்வி கற்ருர்கள், மாணவிகள் வீட்டிற்குள் வாழ்ந்தார்கள். கட்டுப்பாட்டுக்கு அமையவே அக்கால நாகரிகம் விளங்கியது. பெற்ருேரும் முதியோரும் குரு சம்பிரதாய வாழ்க்கையை ஆசிரியப் பண்பாடாகக் கவனித்தார்கள். அந்தக்கால வழக்கமெல்லாம் ஒழிந்தது. ஆசிரமங்கள் அழிந்தன. பெண்களுக்கு விடுதலை வந்தது. இந்தக் காலத்தில் நவீன பொருளாதார முறைகளுக்கும் நகர வாழ்க்கையின் கஷ்டங்களுக்கும் பெற்ருேரும் குழந்தைகளும் உட்பட்டுள்ளார்கள்.

மாணவரும் மாணவியரும் தூரங்களுக்குச் செல்ல வேண்டும். கல்விக்கூடங்களுக்கு பஸ், ரயில்களில் பிரயாணம் செய்ய வேண்டும். விளையாட்டு மைதானங்களில் கூட வேண்டும். திரைப்பட மாளிகைகள், கலை அரங்குகள், பூங்காக்களைத் தரிசிக்க வேண்டும். இங்குமெங்கும் வரும் சோதனைகளையும் நெருக்கடிகளையும் தப்பி வாழ வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பங்களெல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்தால் இக்காலத்து மாணவ மாணவியர்களில் பெரும்பாலார் தங்களைக் காத்து அறநெறி வழியில் வாழ்கிருர்களென்பது பிரத்தியட்சம். இதைவிட முதியோரும் ஆசிரியரும் மேல்நாட்டுப் பழக்க வழக்கங்கள்பற்றிக் கூட்டங்களிலும் விருந்து வைபவங்களிலும் இன்னும் பாராளுமன்றத்திலும் பட்டினசபைகளிலும் கையாளும் முன்மாதிரிகளை மாணவ மாணவிகள் பின்பற்ருமல் இருக்க வேண்டுமென்று சொல்லுவது ஒவ்வாத காரியம். பாராளுமன்றத்திலும் பட்டின சபைகளிலும் நாகரிக முறையென நினைத்து கலகக்காரர்களைப் போல் பேச்சிலும் செயலிலும் முன்மாதிரி காட்டினல் பள்ளிக்கூடச் சங்கக்கூட்டங்களில் அமைதியும் ஒழுங்கும் நிலவச் செய்வது கஷ்டத்திலும் கஷ்டம்.

எங்கள் பழைய பண்பாட்டில் புலாலுண்ணல், புகைபிடித்தல், மதுஅருந்துதல் இழிவான பழக்க வழக்கங்கள் என்று பெரியோர்கள் நடைமுறையில் அவற்றை ஒதுக்கி வைத்து முன்மாதிரி காட்டினர்கள். இந்தக் காலமோ இவையெல்லாம் நவீன நாகரிகத்தின் அங்கங்கள்போல் வர்த்தகர்களும் உத்தியோகத்தர்களும் ஆசிரியர்களும் கடைப்பிடித்து வழிகாட்டும்போது மாணவர்கள் அதிலும் வயது வந்தவர்கள் எப்படி விலகி நிற்பார்கள்? சில நவீன குடும்பங்களில் வயது வந்த பிள்ளைகளுக்குச் சம அந்தஸ்துக் கொடுத்து அவர்கள் புகைக்கலாம், மஸ்தான வஸ்து புசிக்கலாம் எனச் சொல்லிலும் செயலிலும் காட்டும் "பெரியார்"களும் இந்நாட்டிலுளர்.

பெண்களுக்கு அச்சம், மடம், நாணம் வேண்டுமென்று சொன்ன காலமும் ஒன்று இருந்தது. இன்று சமஅந்தஸ்தான காலத்தில் அவைகளுக்கு இடமிருக்கிறதா வென்பதை ஆராயவேண்டும். இந்தக் குணதிசயங்களை சாதுக்கள், பண்டைத் தமிழ் அறிஞர்கள் தவிர மற்றையோர் பேச்சிலோ நடைமுறையிலோ உண்மையாகக் கடைப்பிடிப்பதில்லை.

மாணவ, மாணவியர் பெருகிய இக்காலத்தில் பாலுணர்ச்சிக்கு இடம் கொடுக்கிருர்களென்றும் தவருனவழியில் செல்கிருர்களென்றும் பொறுப்பற்றமுறையில் கருத்து வெளியிடக்கூடாது. இதர நாடுகளில் மாணவமாணவியரின் நடத்தைபற்றித் தக்கமுறையில் ஆராய்ந்தே முடிவு கூறியிருக்கின்றனர். ஓரளவுக்குப் பிறநாட்டின் தகாத எழுத்துப்பிரதிகள் வாயிலாகவும் சில திரைப்படங்கள் காரணமாகவும் மாணவ, மாணவியர் தகாதவழிக்குத் தூண்டப்படுகின்றபோதிலும் எங்கள் நாட்டு மாணவ, மாணவியர், அவர்களின் பழையபண்பாடு காரணமாகநெறிதவருமல் வாழ்கிருர்களெனச் சொல்ல வேண்டும்.

இதைவிடக் கல்வியின் மூலம், திடமும், தன்னைக் காத்துக்கொள்ளும் மனே தைரியமும் வளர்ப்பதென்ருல் ஒற்றுமையை வளர்ப்பதென்பதேஅடிப்படைக் கல்விஞானம். ஆனல் எமது நாட்டின் நிலை? பார்க்குமிடமெல்லாம், பள்ளிக்கூடங்களில், சங்கங்களில், கிராமங்களில் சாதிமதப் பிரிவினையும், பட்டின சபைகளிலும், பாராளுமன்றத்திலும் சுயநலவாதிகள் கிளப்பும் அதர்மவாதங்களினுல்பிரிவினையும் நிலவுகிறது. மாணவ மாணவியர், அவர்களின் உள்ளம் விரியும் காலத்தில் பிரத்தியட்சமாக நமது நாட்டில் காண்பது பிரிவினையும் சூழ்ச்சியுமே. இச்சந்தர்ப்பத்தில் அவர்கள் ஒற்றுமை மனம்பான்மையை வளர்ப்பது எப்படி? அவர்களின் மனதை லயப்படுத்தி திடமும், தீரமும், வீரமும் அவர்களின் உள்ளத்தில் ஊன்றச் செய்வது எப்படி?

மாணவ மாணவியரின் முன்னேற்றத்தையும் நெறியான வாழ்க்கையையும் உண்மையாக விரும்பும் ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், சமூகத் தலைவர்கள் ஆகியோர் உபசாரப்பேச்சைவிடுத்து உண்மையாக அறநெறி வாழ்க்கைக்கு நாட்டிலுள்ள முட்டுக்கட்டைகளை நீக்கி அவர்களுக்கு முன்மாதிரியாக நல்வழி காட்டவேண்டும். மாணவ மாணவியரின் குற்றங்களைச் சுட்டிக்காட்டியிருப்பதற்குப் பதிலாக மனோ வளர்ச்சிக்கான வழிவகைகளைச் செயலில் நிறைவேற்றவேண்டும்.

## சனிக்கிழமை சமூகசேவா கொடித்தினம்

### நீங்கள் செய்யும் சிறுஉதவி அவர்களின் பெருவாழ்வு

யாழ்ப்பாண மாவட்ட சமூகசேவா சபையினரின் வருடாந்த கொடித்தினம் எதிர்வரும் சனிக்கிழமையாகும். மாருப் பிணியுடையோர், வயோதிபர், அனாதைகள், கயரோகம் கண்ட குழந்தைகள், அங்கக் குறையுடையோர் ஆகியோர்களுக்கு உதவும்பொருட்டு இக்கொடித்தினம் நடத்தப்படுகிறது.

அன்றையதினம், தொண்டர்கள் யாழ்ப்பாண அரசாங்கஅதிபரினதும், சபை உத்தியோகஸ்தர்களினதும் கைச்சாத்தும் கொண்ட சேகரிப்புத் தாள்களுடன் பொதுமக்களின் வீடுகளுக்குச் செல்வார்களெனவும் இந்த தர்ம கைங்கரியத்துக்குப் பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியைச் செய்யவேண்டுமெனவும் சமூகசேவாசபையின்தலைவர் திருஎன்.டி.ஜெயவீராவெளியிட்டுள்ள வேண்டுகோள் ஒன்றில் கோரியுள்ளார்.

பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் மாணவ, மாணவியரிடமும் இத்தரும கைங்கரியத்துக்காக நிதி சேர்க்கப்படும். ஒவ்வொருமாணவ மாணவியரும் கொடிகளில் ஒவ்வொன்றைப் பெற்று இந்த உதவித் திட்டத்துக்கு நன்கொடைசெய்வது சாலச் சிறந்ததாகும்.

இயற்கையின் நியதிக்கு ஆளாகி குருடராக, செவிடராக, கூனராக, ஆருமற்ருேராக, ஆதரிப்போரற்ருேராக, துன்று பிணியராக, கசரோகிகளாக, நல்வாழ்க்கை என்பது என்னவென்று தெரியாதவராக இருக்கும் உங்கள் சகோதர சகோதரியர்களுக்கு உங்களால் இயன்ற உதவியைச் செய்வீர்கள் என்ற பெருநம்பிக்கையுடன் சமூகசேவா சபையினர் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் இத்தொண்டுக்குஆதரவாய், ஆதாரமாய் இருக்கும் பெரும் கடமை பொதுமக்களாகிய உங்களைச்சார்ந்ததே. வீடுதேடி வரத் தவறினும் வீதிகளில் அவர்களைக்கண்டு உங்கள் தர்மத்தைச் செய்யுங்கள்.

நீங்கள் செய்யும் சிறிதளவான உதவிகூட. சிறுதுளி பெருவெள்ளமாவது போல், எத்தனையோ அநாதைகளுக்கு, பிணியாளர்களுக்கு உணவளிக்கவும், உடையளிக்கவும் வகை செய்யும். எனவே உங்களால் இயலுமானதை உதவுங்கள்.

## முத்தமிழ்மணிக்கு பாராட்டு

கல்முனை, செவ்வாய்

"மட்டக்களப்பு மக்கள் சார்பில் நீங்கள் எனக்கு போர்த்திய பொன்னுடை, வழங்கிய தங்கப்பதக்கம், அளித்த பொற்கிளியாவும்— எனக்கு நீங்கள் செய்தவைகளாக நான் கருதவில்லை. நீங்கள் கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கே செய்துள்ளீர்கள்என நான் நினைக்கிறேன். கம்பன் ராமாயணத்தை பாடியிராவிட்டால் நீங்கள் இப்படிப்பட்ட வெகுமதிகளை எனக்கு அழிக்கவும் முடியாது."

இவ்வாறு மட்டக்களப்பு ஸ்ரீ சித்திவிக்கினேஸ்வர ஆலய கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 10 நாட்கள் இராமாயண கதாப்பிரசங்கம் செய்து, 11-ம் நாள் பட்டாபிஷேகத்தன்றுநன்றி தெரிவித்துப்பேசுகையில், முத்தமிழ்ப்புலவர் திரு. சி. எஸ். எஸ். மணிபாகவதர் தமது நன்றியுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலயமுன்றலில் முத்தமிழ்ப்புலவர் திரு. சி. எஸ். எஸ். மணிபாகவதரை கௌரவிக்குமுகமாக நடைபெற்ற கூட்டத்திற்கு புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை தலைமைதாங்கினுர்.

சைவப்புலவர், மெய்ப்போதகர் திரு. ஏ. அருணசல தேசிகரினுல் பொன்னுடை போர்த்தப்பட்டது. திரு. ஏ. சின்னத்துரை தங்கப்பதக்கமும், திரு. எம். சிவநேசராசா பொற்கிளியும், மட்டக்களப்பு சைவ அன்பர்கள் சார்பில் முத்தமிழ்மணிக்கு வழங்கினர்.

## சிவமணியின் அந்தியேட்டி

யாழ்ப்பாணம், செவ்.

சேர். கந்தையா வைத்தியநாதனின் அந்தியேட்டி கிரியைகள் எதிர்வரும் 26-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை திருக்கேதீஸ்வரத்தில் நிகழவிருக்கிறது.

## ஐயாறன் எழுதுகிறது

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளுக்கு நல்ல சாரீரம். பாட்டுக் கச்சேரிகள் செய்தால் அதிக வருமானம் கிடைக்கும். தஞ்சையிலே சரபோஜி மகாராஜாவின் அழைப்பை ஏற்று அங்கு சென்று அவரைப் பற்றி பாடியிருந்தால் ஏராளமான மான்யமும் பரிசுகளும் கிடைத்திருக்கும். பல தலைமுறைகள் கவலையில்லாமல் வாழலாம்.

அதையெல்லாம் விட்டு, ராமா ராமா என்று கூப்பாடு போட்டால் சாப்பாடு எப்படி கிடைக்கும்? தினசரி உஞ்சவிருத்தி எடுத்து பிச்சைக்காரப் பிழைப்புத்தான். பல சிஷ்யர்கள் வந்து பாட்டுசொல்லிக் கொள்ளுகிருர்களே, அவர்களிடமாவது 'டியூஷன் பீஸ்' ஏதாவது வாங்கப்படாதா? அதுவுமில்லை. எல்லாம் ஓசிதான். இப்படி பிழைக்கத் தெரியாத ஒரு அசட்டுத் தம்பி இருந்தால் அவருடைய அண்ணனுக்குக் கோபம் வராதா?

தம்பியிடம் நயமாகவும் பயமாகவும் சொல்லிப் பார்த்தார் ஜபேசர் பயனில்லை. பாகப் பிரிவினை செய்து கொள்ளுகின்றனர். இரு அண்ணன் மார்களும் குடும்பத்தாரும் தங்களுக்கு வேண்டியதை எல்லாம் எடுத்துச் செல்லுகின்றனர். பதில் பேசவில்லை, தியாகுவும் அவர் தர்மபத்தினியும்.

ஸ்ரீராமர் படத்தையும் புனித விக்கிரகங்களையும் ஸ்ரீ தியாகராஜரும் துணைவியாரும் வழக்கம்போல் பூசைசெய்து, உஞ்சவிருத்தி எடுத்து வந்து மனத்திருப்தியுடனே காலட்சேபம் நடத்துகின்ருர்கள். பாகம் பிரித்துச்சென்ற மைத்துனிமார்கள், சிலநாட்களில்தியாகரின் மனைவியாரான கனகம்மையிடம் வந்து வெட்கமின்றி அரிசி கடன் கேட்கின்றனர்! தன் தெய்வீகக் கணவனுர் கொண்டு வந்த உஞ்சவிருத்தி அரிசியை எடுத்துக் கொடுக்கிருர் கனகா. போதும் போதும் என்று வாயால் சொல்லிவிட்டு, இன்னும் அரிசியை யாருக்கும் தெரியாமல் எடுத்துக்கொள்ளுகிருர்கள். ஸ்ரீராமரின் நைவேத்தியத்துக்கு இரண்டே பிடி அரிசிதான் பாக்கி. தன் பத்தினியார் இதைக் கூறியதும், சற்றும் சலித்துக் கொள்ளாமல், அதுபோதும் என்று திருப்திப்படுகிருர். ஸ்ரீ தியாகராஜர் உள்ளத்தை உருக்குகிறது இந்தக் காட்சி.

∴ ∘∘ ∴

பாகப் பிரிவினையான பிறகும், சும்மா விடவில்லை. பக்கத்துவீட்டிலிருந்த அண்ணன் ஜப்பேசன், ஸ்ரீ ராம விக்ரகங்கள் இருப்பதால் தானே இந்த மாதிரி இரவு பகலாக பஜனை செய்து பிராணனை வாங்குகிருனென்று நினைத்து ஒருநாள் இரவு அண்ணனும் அவர் மனைவியும் மெதுவாகவந்து அந்த விக்கிரகங்களைக் களவாடி காவேரி ஆற்றுவெள்ளத்தில் எறிந்துவிட்டார்கள். விழித்துப் பார்த்தார் ஸ்ரீ தியாகர். ஸ்ரீ ராமனைக் காணவில்லை. தமது உயிர் போல் பூஜித்துவந்த அந்த விக்கிரகங்களைக் காணுததும் அவரும் அவரது தர்மபத்தினியும் கதறிக் கதறி அழுகிருர்கள். பாடுகிருர்கள். கல்மனதையும் உருக வைக்கிறது அந்தக் காட்சி. கருணைவள்ளலானஸ்ரீராமன் கனவில் வந்து, தான் உள்ள இடத்தைக் கூறவே, ஸ்ரீ தியாகர் உடன்சென்று

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன நடவடிக்கைக்கு உலகெங்கும் கண்டனம்; பல இடங்களில் தொடர்ந்து சுடுகிறார்கள்

## ஐ. நா. தீர்மானம் பற்றி நேரில் தெரிவிக்க பாக். வெளிநாட்டு மந்திரி நியூயோர்க் புறப்பாடு

### சாம் - ஜௌரியா பகுதியில் திடீர் தாக்குதலுக்கு 100 பாகிஸ்தானியர் பலி!

லண்டன், செப். 21

பாதுகாப்பு சபையின் சண்டைநிறுத்தத் தீர்மானம் பற்றி இந்திய, பாகிஸ்தான் அரசாங்கங்கள் நேற்று ஆலோசனை நடத்தின. திரு. சாஸ்திரி நேற்று தனது சகமந்திரிகளுடன் ஆலோசனை நடத்தியபின் இன்று அறிக்கை ஒன்று விடப்போவதாய்க் கூறினார்.

ஜனாதிபதி அயூப்கான் தனது மந்திரி சபையின் அவசரக் கூட்டம் ஒன்றை நடத்தியபின் ஐ. நா. தீர்மானம் பற்றித் நேரடியாகத் தெரிவிக்கும் பொருட்டு வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோவை பாதுகாப்பு சபைக்கு அனுப்புவதென முடிவு செய்யப்பட்டது.

பூட்டோ இன்று ராவல் பிண்டியிலிருந்து நியூயோர்க் புறப்பட்டார்.

**சீனர் சுடுகிறார்கள்**

இதற்கிடையில் லடாக்கிலுள்ள டேம்சாக் பகுதியில் சீனர்கள் ஆத்திரமூட்டும் வகையில் சுட்டுவருவதாய் அறிவிக்கப்படுகிறது. சுசூலிலிருந்து 50 மைல்தூரத்தில் அவர்கள் சுட்டுவருகிறார்கள். சிக்கிமிலுள்ள டஸ்சூலாவிலும் சீனர் சுட்டு வருகிறார்கள். எல்லைக்குள் ஊடுருவல் செய்தாலொழிய திருப்பிச் சுடவேண்டாம் என்ற உத்தரவுக்கிணங்க, இந்தியத் துருப்புக்கள் இரு பகுதிகளிலும் திருப்பிச்சுடவில்லை.

கேங்டாக்கில் துரிதமான காலத்திற்குள் சிவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறந்த முறையில் மேற்கொள்ளப் பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

**ஜோத்பூர் தாக்கப்பட்டது**

ஜோத்பூரில் இன்று காலை 4-30 மணிக்கும் 5 மணிக்குமிடையில் பாகிஸ்தான் விமானங்கள் குண்டு வீசியதாக அறிவிக்கப்பட்டது.

சியாங் கோட் போர் முனையில் இந்தியத் துருப்புக்கள் முன்னேறி வருகின்றன

லடாக் பகுதியில் 1 பாகிஸ்தானிய ஸேபர் ஜெட் விமானம் சுட்டுவீழ்த்தப் பட்டது.

சவிந்தார் முனையில் 12 பாகிஸ்தானிய டாங்கிகளும் இதர வாகனங்களும் நாசமாக்கப்பட்டன.

**எம். பி.க்கள் திருப்தி**

சண்டைப் பகுதிக்குச் சென்று திரும்பிய 12 இந்திய எம். பி.க்கள் நிலைமை பற்றி திருப்தி தெரிவித்திருக்கிறார்கள்.

பாகிஸ்தான் - சீன மிரட்டலை அமைதியுடனும், கடின உணர்ச்சியுடனும் சமாளிக்குமாறு ஆச்சார்யா வினோபாபவே மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அம்பாலாவில் நேற்று 150 வருட பழைமையான சென் பாங்ஸ் தேவாலயம் தாக்கப் பட்டது குறித்து தாம் திடுக்கிட்டு விட்டதாக பிரதம மந்திரி திரு. சாஸ்திரி அறிவித்திருக்கிறார்.

**ரஷ்யாவுக்கு பாராட்டு**

திரு. சாஸ்திரியும், அயூப் கானும் டாஷ்காண்டில் நேரடிப் பேச்சு நடத்த வருமாறு ரஷ்யா விடுத்த அழைப்பை இந்தியா பாராட்டியிருக்கிறது. விரைவில் இதற்கு விரிவான பதில் அனுப்பப்படும் என அறிவிக்கப் பட்டது.

இந்திய - பாகிஸ்தான் சம்பந்தமாக ரஷ்யா மேற்கொண்டிருக்கும் சமாதான முயற்சி சரித்திரத்திலேயே இதுதான் முதல் தடவை எனக் கூறப்படுகிறது. அதுவும் சீன எச்சரிக்கைக்குப் பின் இரு தலைவர்களையும் தம் நாட்டில் சந்தித்துப் பேசவருமாறு ரஷ்யா அழைத்திருப்பதற்கு விசேஷ முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

**சென்யீ**

இதற்கிடையில் சீனவெளிநாட்டு மந்திரி மார்ஷல் சென்யீ தாயகம் திரும்பும் வழியில் காபூலில் சற்றுத் தங்கினார். ஆப்கன் பிரதமர் திரு. முகம்மது யூசுபுடன் இந்தோ - பாக். சண்டை குறித்து அவர் விவாதித்தார்.

**மறுப்பு**

இந்தியாவுக்கான எண்ணெய் சப்ளையை ஈரான் நிறுத்தியிருப்பதாக வந்த செய்தி தவறு என டெஹ்ரானில் மறுக்கப்பட்டது.

**ஜப். பிரதமர்**

காஷ்மீர் பிரச்னையை சண்டையால் அல்லாமல் சமாதான முறையில் தீர்க்குமாறு ஜப்பானியப் பிரதமர் திரு. ஸாட்டோ பாகிஸ்தானுக்கு விண்ணப்பித்திருக்கிறார்.

சீனாவின் நடவடிக்கையை இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர் திரு. நம்பூதிரிபாத் கண்டித்திருக்கிறார். பாகிஸ்தானுடன் யுத்தத்திலீடுபட்டிருக்கும் சமயத்தில் சீனா மேற்கொண்டிருக்கும் போக்கு அபாயகரமானது என அவர் கண்டித்திருக்கிறார்.

பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியும் சீனாவின் நடவடிக்கையைக் கண்டித்திருக்கிறது.

**மேற்கு விரோத உணர்ச்சி**

பாகிஸ்தானின் மேற்கு நாடுகளுக்கு விரோதமான உணர்ச்சி தலைதூக்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 750 பிரிட்டிஷ் பிரஜைகள் வெளியேறத் தயாராய் இருக்கிறார்கள்.

**100 பாகிஸ்தானியர்**

சம்ஜௌரியா பகுதியில் இன்று இந்தியத் துருப்புக்கள் திடீரெனத் தாக்கி 100 பாகிஸ்தானியரைக் கொன்றதாய் அறிவிக்கப் பட்டது.

**உலக கண்டனம்**

சீனாவின் இறுதி எச்சரிக்கையைத் தொடர்ந்து உலகின் பல பகுதிகளிலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## புனித ஏரி

பெர்லின், செப். 21

கி. மு. 1-வது நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு புராதன ஜெர்மன் மலை ஜாதியினரின் ''புனித ஏரி'' ஒன்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் எர்பர்ட் என்னுமிடத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டது. பூமியிலிருந்து கிளம்பிய ஒரு நீர் ஊற்றின் தண்ணீர் ஒரு பெரிய பள்ளத்தில் பாய்ந்து இந்த ஏரியை உண்டாக்கியதால் அக்காலத்து மலைஜாதியினர் அதனைப் புனித ஏரியாகக் கொண்டாடினர். ஏரியைச் சுற்றிச் சில ஆலயங்களை நிறுவி அவற்றில் தெய்வங்களுக்கு மிருகங்களையும் மனிதர்களையும் பலியிட்டு வந்தனர். புனித ஏரியையும் அதைச்சுற்றி மனிதர்வசித்த இடங்களையும் தோண்டி ஆராய்ச்சி செய்வதின்மூலம் கி. மு. 1-வது நூற்றாண்டுக்கும் கி. பி. 4-வது நூற்றாண்டுகளுக்குமிடையேயுள்ள காலத்தில் வசித்த புராதன ஜெர்மனியர்களின் கலாச்சாரத்தைப்பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

## மேத்தாக்கள் தகனம்

ஆமதாபாத், செப். 21

விமானவிபத்தில் மாண்ட முன்னாள் குஜராத் முதல்வர் திரு. பல்வந்தராய்மேத்தா, அவரதுமனைவி சரோஜ்பென் மேத்தா ஆகியோரின் சடலங்கள் நேற்று சபர்மதிக் கரையில் தகனம் செய்யப் பட்டன. மகன் பிரபாகர் முதலில் தந்தையின் சிதைக்கும் பின் தாயின் சிதைக்கும் தீ மூட்டினார்.

## இந்தோனேஷிய விமானம்நொருங்கியது

குச்சிங், செப். 21

இந்தோனேஷியாவின் பிரம்மாண்டமான ஸி 130 ரக துருப்பு விமானம் சரவாக் எல்லையருகே சுட்டு வீழ்த்தப்பட்டு நொறுங்கியதாக அறிவிக்கப்பட்டது. மலேஷிய பாதுகாப்புப் படைகள் சுட்டு வீழ்த்தியதையடுத்து அது நொறுங்கியது.

## ஐ. நா. வில் சீன பிரதிநிதித்துவம்

நியூயோர்க், செப், 21

ஐ. நா. பொதுச்சபையின் 20-வது கூட்டம் இன்று ஆரம்பமாகிறது. சீனாவை ஐ. நா. வில் அனுமதிப்பது உட்பட 108 நிகழ்ச்சி நிரல்கள் அட்டவணையில் இருக்கின்றன.

சிங்கப்பூரும், மாலைதீவும் ஐ. நா. வில் புதிய அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## 175 இந்திய வீரர்கள் கொல்லப் பட்டனர்

ராவல்பிண்டி, செப். 21

இன்று பாகிஸ்தானிய சர்கோடா விமானத் தளத்தைத் தாக்கிய இந்திய விமானங்களில், 1 கான்பரா விமானம் சுட்டுவீழ்த் தப்பட்டதாய் அறிவிக்கப் பட்டது.

பாகிஸ்தானிய வெடி குண்டு விமானங்கள் ஆதம் பூர், ஹல்வாரா, ஜோத்பூர் ஆகிய இந்தியத் தளங்களை தாக்கியதாயும் அறிவிக்கப் பட்டது.

நேற்று ஒரு இந்திய ஹண்டர் விமானமும், இதர இரு விமானங்களும் நாசமாக்கப்பட்டதாயும், 1 இந்திய விமானி சிறைப்பிடிக்கப் பட்டதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது. காஷ்மீரில் ''விடுதலை வீரர்கள்'' 175 இந்தியத் துருப்புகளையும் பொலிசாரையும் நேற்றுக் கொன்றதாக ''காஷ்மீரின் குரல்'' வானொலி அறிவித்தது.

சீனா இன்று இந்தியாவுக்கு அளித்த ஆட்சேபக் குறிப்பொன்றில் இந்திய துருப்புகள் ஆத்திரமூட்டும்வகையில் வேண்டுமென்றே சீனப் பகுதிக்குள் பிரவேசித்து சிவிலியன்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறியிருக்கிறது.

இதற்கிடையில் கிழக்கு எல்லையில் யுத்தத்தை விஸ்தரித்தால் அதன் விளைவுகளை பாகிஸ்தான் ஏற்க வேண்டும் என இந்தியா எச்சரிக்கை விடுத்திருப்பதாய்க் கூறப்பட்டது.

## சீனா, இந்தோனேஷியாவுக்கு ரஷ்யா எச்சரிக்கை

### இந்தோ-பாக். பூசலில் தலையிடாதீர்

மாஸ்கோ, செப். 21

இந்தியா-பாகிஸ்தான் போரில் தலையிட வேண்டாம் என சீனாவையும், இந்தோனேஷியாவையும் ரஷ்யா, ராஜீயத்துறைகள் வாயிலாகக் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது

ரஷ்யா கடைசியாக மேற்கொண்டிருக்கும் இம் முயற்சி ரஷ்ய வட்டாரங்கள் மூலமே தெரியவந்துள்ளது.

இதுசம்பந்தமாக அதிகாரபூர்வமான அறிவிப்புகள் எதுவும் செய்யப்படவில்லை. சீனாவிடமும், இந்தோனேஷியாவிடமும் தான் மேற்கொண்டுள்ள முயற்சி பலிக்காவிடில் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது குறித்து ரஷ்யா பரிசீலிக்கும் என நம்பப்படுகிறது.

நியாயம் எது என்பதை இனியும் பாகிஸ்தான் உணரக் கூடுமென்றும், சமரசம் செய்து வைக்க தன் செல்வாக்கைப் பயன்படுத்தத் தயார் என இரு நாடுகளிடமும் ரஷ்யா தெரிவித்திருந்த வாய்ப்பை ஏற்கக் கூடும் என்றும் ரஷ்ய வட்டாரங்கள் நம்புகின்றன.

ரஷ்யாவின் பிரேரணையை பாகிஸ்தான் நிராகரித்து விடவில்லையென்று தெரிகிறது. ஆனால் அதே சமயத்தில் அயூப்கானின் பதில் திட்டவட்டமாக இதை ஏற்பதாயுமில்லை.

இந்தப் பகுதியில் சமாதானம் நிலவச் செய்ய ரஷ்யா செய்யும் முயற்சியை வரவேற்பதாக உள்ளது, இந்தியாவின் பதில் எனத்தெரிகிறது.

பிரதமர் கோஸிஜினின் பிரேரணைக்கு அனுபவ ரீதியான உருக்கொடுப்பதில் ரஷ்யா முனைந்திருப்பதாக சோவியத் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பாகிஸ்தான் சமாதானப் பாதைக்குத் திரும்பும் என்ற நம்பிக்கையில் ரஷ்யா இதில் ஈடுபட்டுள்ளது.

## ஐ. அ. குடியரசு கவலை

கெய்ரோ, செப். 21

இந்தோ — சீனஎல்லையில் சீனாவின் நடவடிக்கை குறித்து ஐக்கிய அராபியக் குடியரசு தனது கவலையைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறது. பிரதமர் அலிசாப்ரி கெய்ரோவிலுள்ள சீனத் தூதுவரை அழைத்து இதுபற்றித் தெரிவித்ததாகக் கூறப் பட்டது.

## கலாச்சார ஒத்துழைப்பு

பெர்லின், செப். 21

சமீபவருடங்களில் இந்தோனேஷியாவுக்கும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்குமிடையே கலாச்சார ஒத்துழைப்புபெருமளவு அதிகரித்துள்ளது. வானொலிஒப்பந்தம் - சினிமாப்பட ஒப்பந்தம் போன்ற பல உடன்படிக்கைகள் இரு நாடுகளும் செய்துகொண்டிருக்கின்றன. எழுத்தாளர் தூதுக் கோஷ்டிகளைப் பரிவர்த்தனை செய்துகொள்ளவும் இரு நாடுகளின் எழுத்தாளர் சங்கங்கள் இசைந்துள்ளன.

## குத்துச் சண்டைப் போட்டி

பெர்லின், செப். 21

அண்மையில் பெர்ட்செட் நகரில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசும், ஐக்கிய அரபுக் குடியரசும் 10—10 புள்ளிகள் பெற்றதால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

## ஜெர்மன் பற்றி தொழிற்கட்சி

லண்டன், செப். 21

''ஜெர்மன் ஜனநாயகக் குடியரசை அங்கீகரிப்பதும் அதனை ஐ. நா. வில் அனுமதிப்பதும் ஐரோப்பாவில் அணுஆயுதப் பிரதேசம் ஒன்றை நிறுவுவதற்கான முதல்நடவடிக்கையாகும்'' என பிரிட்டிஷ்தொழிற்கட்சியின் அடுத்த வருடாந்த மகாநாட்டில் விவாதிக்கப் படவிருக்கும் ஒரு தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "நன்முறையில் இயங்கும் சங்கங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ முடியும்"

யாழ்ப்பாணம், செவ்வாய்
'இன்றைய நிலையில் நல்ல சங்கங்கள் தோன்றுவது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கும் மிக்க உதவுவதாக இருக்கும். ஐக்கிய போக்குவரத்துச்சேவை கூட்டுறவுச் சங்கமும் இந்த விதத்தில் உதவும் என நம்புகின்றேன்'.

இவ்வாறு ஐக்கிய போக்குவரத்துச்சேவை கூட்டுறவுச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் மேற்படி சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தும் பேசிய ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. சி. சே. மாட்டின் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், சங்கத்தின் வளர்ச்சி அங்கத்தவரின் ஒத்துழைப்பில் தான் தங்கியிருப்பதாகவும் ஒத்துழைப்பின் மூலம் தான் கொண்ட நோக்கத்தை அடையலாமென்றும் கூறினார்.

தீவுப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் திரு. ப. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் ஏற்றுமதி இறக்குமதி தற்போது தாமதமாக நடைபெற்று வருவதால்தான் நாட்டில் விலைவாசிகளில் ஏற்றம் உண்டாகுவதாகவும் இவ்வித சங்கங்கள் திறம்பட செயல்படத் தொடங்கினால் நாட்டில் பொருள்களின் விலை உயர்வைத் தடுப்பதற்கான வழிபிறக்குமென்றும் தெரிவித்தார். முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் உருவாகும் இச்சங்கம் போன்ற சங்கங்கள் காலப்போக்கில் இலங்கையின் பல பாகங்களிலும் தோன்றக்கூடும் என எதிர்பார்க்க இடமுண்டு.

ஐக்கிய போக்குவரத்துச் சேவைச் சங்க நிர்வாக செயலாளர் திரு. சோ. சீவரத்தினம் பேசுகையில், லொறி உரிமையாளர்கள் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் பிடியிலிருந்து விலகி நிற்கவும் நியாயமான அளவு கூலிபெற்று ஒற்றுமையுடன் சேவை செய்யவுமே சங்கம் அமைக்கப்பட்டது என்றும் கூறினார். திருவாளர்கள் க. தளையசிங்கம், ஆ. ஹென்ரி, பொ. நவரத்தினசிங்கம் ஆகியோரும் பேசினர்.

## வறிய இளைஞர்களுக்கு பயிற்சி

பம்பலப்பிட்டி, செவ்.
சேரிப்பகுதிகளில் வாழும் இளைஞர்களுக்கு மோட்டார் இயந்திர அமைப்பில் பயிற்சி பெறுவதற்கும், தையல் வேலைகளில் பயிற்சி பெறுவதற்குமான வாய்ப்பை இலங்கை இளைஞர் சபை செய்து கொடுக்க முன்வந்துள்ளது. சமூகசேவையில் ஈடுபட்ட இந்த ஸ்தாபனம் பயிற்சிபெற்ற பின் இந்த இளைஞர்கள் வேலை பெறுவதற்கு சுலபமாயிருக்கும் என்ற நோக்கத்திலே இச்சேவையை செய்ய முன்வந்துள்ளது.

பயிற்சிபெற்ற பின்னர் இளைஞர்களுக்கு தராதரப் பத்திரங்கள் வழங்கப்படுமெனவும், இவர்களுக்கு வேலைதேடிக் கொடுப்பதிலும் இச்சபை உதவிபுரியும் எனவும் தெரியவருகிறது.

புலிமுக

## சிலந்தி கடித்த பெண் மரணம்

யாழ்ப்பாணம், புதன்
புலிமுகச் சிலந்தி கடித்த ஒரு ஆசிரியை வீட்டு வைத்தியம் செய்த பின் முகத்தில் ஏற்பட்ட வீக்கம் காரணமாக இரு வாரத்தின் பின் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் மரணமானார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருநாவுக்கரசு பொன்மயல் என்னும் 32 வயதுள்ள ஆசிரியையின் மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரிய வந்தது. யாழ்ப்பாணம் நகரப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் விசாரணை நடத்தினார்.

புலிமுகச் சிலந்தி கடித்து இரு வாரத்தின்பின் மூக்கில் படுப் போட்டதாகவும், இதன்பின் முகமெல்லாம் வீங்கியதாகவும், வீட்டு வைத்தியம் செய்து பயனளிக்காததால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும், கர்ப்பிணியாயிருந்த ஆசிரியை ஒரு பெண் குழந்தையை பெற்ற பின் மரணமானார் என்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

இரத்ததில் நச்சுத்தன்மை ஏற்பட்டதனால் மரணமானார் என டாக்டர் சுப்பிரமணியம் தெரிவித்தார். இயற்கை மரணமென மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## 'சனசமூக நிலையங்களுக்கு பேரிழப்பு'

யாழ்ப்பாணம், புதன்
'சாதி, மத பேதமின்றி சமூக ஒற்றுமைக்காகவும் பின்தங்கிய கிராமங்களின் முன்னேற்றத்துக்காகவும் அயராது உழைத்த சிறந்த சமூகசேவையாளரான திரு. சண்முகத்தின் பிரிவு சனசமூகநிலையங்களுக்குபேரிழப்பாகும்' என நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையத்தில் வடபகுதி உள்ளூராட்சி விசாரணை அதிகாரியாக கடமையாற்றிய திரு. வி. சி. சண்முகத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் நிலையப் பாதுகாவலர் புலவர் கி. சூசைப்பிள்ளை பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. நீ. எஸ்தாக்கி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி நிலையக் காரியதரிசி திரு. சூ. அமிர்தநாதர் பேசுகையில் காலஞ்சென்ற திரு. சண்முகம் கடமை, கண்ணியம் ஆகிய சிறந்த குணங்களைக் கொண்ட ஓர் உத்தம அரசாங்க சேவையாளராகக் கடமையாற்றினார் என்றும் சமூகசேவையில் தமது வாழ்நாளில் பெரும் பகுதியை செலவிட்டாரென்றும் கூறினார்.

திருவாளர்கள் சூ. மார்க்கு, நீ. அருளானந்தம், யோ. பிரான்ஸிஸ் ஆகியோரும் பேசினர். அன்னாரின் பிரிவு குறித்து கூட்டத்தில் இரு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

40 வருட

## சேவைக்குப்பின் ஓய்வு

ஊர்காவற்றுறை, செவ்.
ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் கடந்த நாற்பது ஆண்டுகால ஆசிரியசேவைக்குப் பின் திரு ரி. எஸ். அருளானந்தம் தற்போது ஓய்வு பெற்றுள்ளார். இவர் கல்லூரியின் ஆரம்ப ஆசிரியர்களுள் ஒருவராவர். கல்லூரியின் வளர்ச்சிக்காகப்பெரிதும் உழைத்தவர்.

சென்றவாரம் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் இவரின் சேவையைப் பாராட்டி இவரைக் கௌரவித்தனர்.

## பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், செவ்.
நவாலியூர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் பண்டித ரத்தினம் சு. நவரத்தினத்திற்கும், இலங்கை சாகித்தியமண்டலத்தின் பரிசைப் பெற்ற பண்டிதரத்தினம் வித்தியாரத்தினம் சோ. நடராசாவிற்கும் இம்மாதம் 29-ம் திகதி மாலை நவாலி மகாவித்தியாலயமண்டபத்தில் ஒரு பாராட்டுவிழாவை நடத்தவிருக்கின்றது.

கூட்டத்திற்கு முதலியார் வை. மகேசன் தலைமை வகிப்பார். பலர் பாராட்டுரைகள் நிகழ்த்துவார்கள்.

ஃ ஃ ஃ

மட்டக்களப்பு, செவ்.
வித்துவான் பண்டித வீ. சி கந்தையா எழுதிய 'மட்டக்களப்புத் தமிழகம்' என்னும் உரைநடைநூல் இவ்வாண்டு சாகித்திய மண்டலப் பரிசிலைப் பெற்றமையைப் பாராட்டுமுகமாக மட்டக்களப்புத் தமிழ்எழுத்தாளர்சங்கம் பாராட்டு விழாவொன்றை நடத்தியது.

மட்டக்களப்புமெதடிஸ்த மத்திய கல்லூரியில் நடைபெற்ற இப்பாராட்டுவிழாவுக்கு மட்டக்களப்பு முதல் பிரதிநிதி திரு. செ. இராசதுரை தலைமை தாங்கினார்.

திரு. சி. முருகப்பாவின் வாழ்த்துக்களுடன் ஆரம்பமாகிய இப்பாராட்டுவிழாவில் மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. சி. கிருஷ்ணபிள்ளை பாராட்டுப்பத்திரம் வாசித்துள்ளார்.

தலைவரின் தலைமை உரையை அடுத்து திரு. பொ. சின்னத்துரை, திரு. கே. வி. இராசரத்தினம், திருமதி திரவியம் இராமச்சந்திரன், ஏ. எம். மஜீத், சி. மௌனகுரு, திருமதி கமலபூஷணி, கா. சி. ஆனந்தன், ஜனாப் அ. ஸ. அப்துல் ஸமது ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## புதிய இடம்

சண்டிலிப்பாய், செவ்.
சண்டிலிப்பாய் மத்திய சனசமூக நிலையம் தற்பொழுது அதற்குச்சொந்தமான புதிய கட்டடத்தில் இயங்கிவருகிறது. சீரணி நாகபூஷணி ஆலயத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்ட இக்கட்டடம் இந்துசமய முறைப்படி நேற்றுத்திறந்து வைக்கப்பட்டது.

# "உலகப் புகழ்பெற்ற பலர் பள்ளிக்கூடத்தில் பரிசுபெறவில்லை"

### பரிசளிப்பு விழாவில் நீதியரசர்

குரும்பசிட்டி, செவ்.
'உலகத்தின் புகழ்பெற்றவர்கள் தங்கள் பள்ளிக்கூடங்களில் பரிசு பெற்றவர்கள் அல்லர். ஐசாக்நியூட்டன், மைக்கேல் பாரடே இன்னும் ஏனைய விஞ்ஞானக் கலை மணிகள் தங்களுடைய சிறு பராயத்தில் பள்ளிக்கூடங்களில் பரிசு பெற்றவர்களல்லர்.

தங்கள் ஊக்கத்தினாலும், உற்சாகத்தினாலுமே விஞ்ஞானிகள் உலகத்திற்கு மிக அரும்பெரும் விஞ்ஞானக் களஞ்சியங்களைக் கொடுத்து மறைந்தார்கள். எத்தனையோ பிரதமர்கள், மந்திரிகள், வைத்திய நிபுணர்கள் பள்ளிக்கூடத்தில் திறமையற்றவர்களாகவே இருந்திருக்கின்றார்கள் ஆகையால் இன்று பரிசு பெற்ற மாணவர்கள் சோர்வு அடைதல் கூடாதுஎன்று ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஸ்தாபகர் தினம்-பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நீதியரசர் எச். டபிள்யு. தம்பையா கியூ.சி. பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தமதுஉரையில் குறிப்பிட்டதாவது.-

சிறு பிள்ளைகளில் ஆசிரியர் வைத்த அன்பிலேயே அவர்கள் படிக்கும் பாடங்களில் விருப்பம் கொள்வர். இது ஒரு உளநூல் தத்துவமாகும். எல்லா விரல்களும் ஒரே அளவில் இல்லை. அதே போன்று எல்லா மனிதர்களும் ஒரே வகையான விவேகம் பெற்றவர்கள் அல்லர். ஆகையால் சாதாரண பகுத்தறிவு உடையவர்கள் ஊக்கத்தினாலும் பிரையாசையினாலும் கலையை வளர்த்து ஞாபக சக்தியைக் கூட்டி மன உறுதியைப் பெறலாம்.


தற்காலம் விஞ்ஞானப் படிப்பில் மிக்க கைதேர்ந்த மாணவ மாணவிகள் தான் அரசாங்கத்தில் பணிபுரியக் கூடியதாக இருப்பதால் பெற்றோர்கள் பிள்ளைகளை விஞ்ஞானம் படிக்கவேண்டுமென்று வற்புறுத்தக் கூடாது. இந்த நெருக்கடியின் காரணமாக மாணவர்கள் படிக்க இயலாமல் சோம்பல் அடைகிறார்கள்.

சுயபாஷைகளைப் படிப்பது அவசியம். ஆனால் ஆங்கிலத்தை அசட்டை பண்ணுவது அபாயம். ஆங்கிலம் உலக மொழி. இப்பாஷையில்தான் அரசியல் சட்ட நூல்கள், சமயநூல்கள், விஞ்ஞான நூல்கள், மருத்துவ நூல்கள், தத்துவஞானநூல்

(5-ம் பக்கம் பார்க்க)

REGAL--JAFFNA
NOW SHOWING!
TONY RANDALL
IN
7 FACES OF DR. LAO
(M. G. M's Metro Color)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜிதா (ஹட்டன்)
மொடேர்ன் (பண்டாரவளை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2 காட்சிகள்; சனி, ஞாயிறு 4காட்சிகள்
சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். விஜயா
நடிக்கும்



கைகொடுத்த தெய்வம்

வெங்காயம், தக்காளி, மிளகாய், கத்தரி, கோவா முதலிய பயிர்களுள் உண்டாகும் களைப்புல்லை அழிப்பதற்கு
புதிய மருந்து
டெக்தால்
DACTHAL
Agents:
PHONE: 397 ROYAL DISPENSARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

மானிப்பாய் கலைக்கோவில்
வருடாந்த விழா 1965

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 23-9-65 மாலை 6-30 மணிக்கு லீலாம்பிகை கந்தையா அவர்களின் மாணவிகள் அளிக்கும் நடனவிருந்து நடைபெறும். 868


## முல்லைத்தீவுப் பட்டணசபை
## கேள்விவிளம்பரம்

1. 1965-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 27-ந் திகதி திங்கட்கிழமை காலை 10-00 மணிவரை முல்லைத்தீவுப் பட்டணசபைத் தலைவரால் சுந்தரலிங்கம் வீதி நீடித்துத் திருத்துவதற்கான வேலைக்கு சில்வைத்த கேள்விகள் இரு பிரதிகளில் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் பட்டணசபை அலுவலகத்தில் அதற்கென அமைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் போடப்படவேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலம் முல்லைத்தீவு பட்டணசபைத் தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும். கேள்வியைக் கொண்ட காகிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் சுந்தரலிங்கம் வீதி நீடிப்பு வேலை திருத்துவதற்கான கேள்வி என எழுதப்பட்டிருத்தல்வேண்டும்.

3. ரூபா 50-00 பிணைப் பணமாகக் கட்டியபின் பட்டணசபைத் தலைவரால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்படுதல்வேண்டும். பிணைப் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படுதல்வேண்டும்.

4. கேள்விகளில் உள்ள மாற்றங்கள் அழித்தல்கள் யாவும் கேள்விக்காரனின் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தல்வேண்டும்.

5. ஒருவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டு ஒரு வாரத்துக்குள் தலைவருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு வேலையை ஆரம்பிக்கப்படத் தவறும் ஒப்பந்தக்காரர் எவருக்கும் கேள்விப்பிணைப் பணம் ரூபா 50-00 திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

6. கேள்விக்காரரை முடிவாகத் தெரிவுசெய்வதற்கு முல்லைத்தீவு பட்டணசபைத் தலைவருக்கு காரணம்காட்டாமல் எந்த அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கும் உரிமையும் ஒரு கேள்வியின் எந்தப்பகுதியையும் ஏற்கும் உரிமையும் உண்டு.

7. கேள்விப்பத்திரங்கள் அனைத்தும் 25-9-1965 சனிக்கிழமை காலை 11-00 மணிவரை இப் பட்டணசபை அலுவலகத்தில் மேற்போந்த நிபந்தனைகளுக்கிணங்க வழங்கப்படும்.

8. கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 10-00 இக்காரியாலயத்தில் செலுத்தப்படல்வேண்டும். இப்பணம் எக்காரணம்கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

(ஒப்பம்) தலைவர்,
பட்டணசபை,
முல்லைதீவு.

பட்டணசபைக்காரியாலயம்
முல்லைத்தீவு.
18-9-1965. 869

## சாரணர் முகாம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்ட சாரணர் இயக்கத்தினரின் வருடாந்த சாரணர் முகாம் நிகழ்ச்சிகள் எதிர்வரும் சனிக்கிழமை பி. ப, 4 மணியளவில் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் ஆரம்பமாகும். பல்வேறு சாரணர் இயக்க நிகழ்ச்சிகள் இங்கு நடாத்தப்படும்.




# வடமாகாண பாடசாலைகளின் உதைபந்தாட்டப் போட்டிகள்
## அடுத்த முதல் திகதி ஆரம்பம்

குரும்பசிட்டி, செவ்.

வடமாகாண பாடசாலைகளின் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி அக்டோபர் முதல் திகதி யாழ். விளையாட்டு அரங்கில் ஆரம்பமாகவிருக்கின்றது. இவ்வருடம் முதற் பிரிவில் 19 கோஷ்டிகளும், இரண்டாம் பிரிவில் 13 கோஷ்டிகளுமாக மொத்தம் 32 கோஷ்டிகள் கலந்துகொள்கின்றன. யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்க ஆதரவில் நடைபெறவிருக்கும் இச்சுற்றுப் போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக உதைபந்தாட்ட மத்தியஸ்தர் கழகத்தில் இருந்து கடமையாற்றுவர். சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் கல்லூரிகளின் விபரம் பின்வருமாறு:-

### முதல் பிரிவு தொகுதி ''ஏ''

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி.

தொகுதி ''பி'':— வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, சாவகச்சேரி றிபேக் கல்லூரி, வைத்தீஸ்வர வித்தியாலயம், ஸ்ரான்லி மகா வித்தியாலயம்.

### இரண்டாம் பிரிவு

தொகுதி ''ஏ'': அளவெட்டி அருணோதயக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி யாழ். மத்திய கல்லூரி, உரும்பராய் இந்துக்கல்லூரி.

தொகுதி: ''பி'' சுன்னாகம் ஸ்கந்தவரோதய, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன், காரைநகர் இந்து, தெல்லிப்பழை மகாஜனா, கனகரத்தினம் மகா வித்தியாலயம்.

தொகுதி: ''சி'' தெல்லிப்பழை யூனியன், யாழ் இந்து, மானிப்பாய் இந்து, பரமேஸ்வராக் கல்லூரி.

## உலகப் புகழ்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எழுதப்பட்டிருக்கின்றன. இதனை சுயபாஷையில் மொழிபெயர்ப்பது சுலபமில்லை. பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்பிற்குப் பின்னர் ஆங்கிலம் கட்டாய பாடமாகக் கற்பிக்கவேண்டுமென்ற அரசாங்கத்தின் தீர்மானம் மிகவும் பாராட்டக்கூடியது.

சமீபகாலத்தில் மாணவர்களிடையே அதிகரித்து வரும் ஒழுக்கவீனத்தைப் பற்றி அதிபர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இதையிட்டு நாம் வருந்துகிறோம். இதனை நீக்கபெற்றோர் பிள்ளைகளுக்கு ஆத்மீக ஞானத்தை ஊட்டவேண்டும்.

'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' என்ற கருத்தை ஆசிரியர்களும் மாணவர்களும் மறவாதிருக்க வேண்டும். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் கந்தரோடைப் பள்ளிக்கூடம் ஒரு பிரபல்யமான கல்விக் கூடமாக இருக்கவில்லை. ஆனால் இன்று ஈழத்தில் ஒருவிசேஷ கல்லூரியாக இது துலங்குகின்றது. இதற்கு அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் முயற்சியே காரணமாகும்.

படித்த மாணவர்களுக்கெல்லாம் அரசாங்க உத்தியோகம் கிடைக்குமென நினைப்பது தவது. ஆகையால் கிருஷிகம், வர்த்தகம், கைத்தொழில்களை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் ஈழம் நீர்வளமும், நிலவளமும் நிறைந்த நாடு. மாணவர்கள் முயற்சியால் தான் இந்தநாடுமுன்னேற்றமடையவேண்டும்.

நாம் நடைமுறையில் தீண்டாமையை கடைப்பிடித்த சமூகத்தில் ஒருபகுதியினரை தாழ்த்திவரும் வழக்கம் எம்மைவிட்டு நீங்கவில்லை. இக்கொடிய வழக்கத்தை என்று விடுகின்றோமோ அன்று தான் சாபம் எம்மைவிட்டு நீங்கும்.

## ஐயா றன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த விக்கிரகங்களை எடுத்துவந்து ஆனந்தப்படுகிறார்.

பின்னர் அண்ணனின் மனம் மாறுகிறது. அண்ணனும் குடும்பத்தாரும் வந்து, மன்னிப்புக்கோருகின்றனர். ஸ்ரீ தியாகராஜரின் பஜனைகளில் அவர்களும் சேருகின்றனர்.

இந்த இசை நாடகத்தை கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் சென்றவாரம் கண்டேன். மூன்று மணி நேரமும் போனதே தெரியவில்லை. ஞாயிறு வகுப்பைச் சேர்ந்த ஸ்ரீசாரதா சங்கீத சமிதி மாணவிகள் பக்திமயமான இந்த நாடகத்தைத் திறம்பட நடித்து, எல்லாருடைய பாராட்டுதலையும் பெற்றனர்.

ஸ்ரீதியாகராஜரின் பலபல கீர்த்தனைகளையும் இன்னிசையுடன் பாடுவதுடன், அதன் கருத்துகளை விளங்கவைக்கும் முறையில் ஸ்ரீதியாகராஜர் பேசுவதால், இப்பாடல்களைப் பொருள் உணர்ந்து ரஸிக்கமுடிகின்றது.

பழைய கிராம வாழ்க்கையையும், பண்பாடுகளையும் விளக்கும் இந்த நாடகத்தில் நவரசங்களும் பொருந்தியுள்ளன. நம் மாணவிகள் இவ்வளவு திறமையாக இதை நடித்தது பெருமைப்படத்தக்கதாகும். ஸ்ரீதியாகராஜராகவும், அவர் மனைவியாகவும் நடித்தவர்கள் இருசகோதரிகளே. இவ்விரு கலைச்செல்விகளின் இன்னிசையும், இயற்கையான நடிப்பும் போற்றத்தக்கது.

மிஷனைச் சேர்ந்த ஸ்ரீரங்கானந்தா சுவாமி அவர்களே, இந்த நாடகத்துக்கான வசனங்களை உயரிய முறையில் எழுதி, பயிற்சி அளித்து, டைரக்ட்செய்திருக்கின்றார். முன்னர் ஸ்ரீ ஆண்டாள் நாடகத்தைத் தயாரித்து அளித்துப் புகழ் பெற்ற சுவாமி அவர்கள் ஸ்ரீ தியாகராஜர் நாடகத்தையும் தயாரித்து கலை அழகுடன் தெய்வபக்தியைப் பரப்பும் புனிதப் பணியைச் செய்துள்ளார்கள்.

இந்த கலைக்கோஷ்டியினர் யாழ்ப்பாணம் முதலிய இடங்களுக்கும் வந்து இந்தப் புனித நாடகங்களை நடத்தவேண்டும். இது சமயத்துக்கும், சமூகத்துக்கும் செய்யும் பெரும்பணியாகும்.

ஞாயிறன்று பரிசளிப்பு விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய இந்திய ஹைகமிஷனர் ஸச்சார் அவர்கள், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் செய்துவரும் இவ்வித கைங்கரியங்களைப் போற்றியதுடன், மாணவிகளைப் பாராட்டி, இவ்வித கலைப் பணிகளுக்கு அதிக ஆதரவு அளிக்க வேண்டுமென்றும் கூறினார்கள்.

நாடகத்தில் முதல் காட்சி ஸ்ரீதியாகர் வாழ்ந்த திருவையாற்றின் மகிமையைக் காட்டியது. எப்படித் தெரியுமா? அது மூவராலும் பாடல்பெற்ற ஸ்தலமாகும். திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவரும் பக்தகோடிகள்சூழ, அங்கு மூலஸ்தானத்தில் வந்து தேவாரப்பதிகங்கள் பாடுகின்றனர். இதைக் கண்டபோது, நம்மையும் அறியாமல் புளகாங்கிதமடைகிறோம். தமிழ் மன்னர்கள் ஆண்ட அவ்வித பொற்காலம் மீண்டும் வருமா? ஃ ஃ ஃ

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க், கிங்கேயென்றருள் புரியும் எம்பெருமான் எருதேறிக், கொங்கேயும் மலர்ச் சோலைக் குளிர்பிரமபுரத்துறையுஞ், சங்கே யொத்தொளிர் மேனிச் சங்கரன்றன் தன்மைகளே.

— சம்பந்தர்

## வரி விளம்பரம்


### தேவை

யாழ்ப்பாணத்தில் தொழில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஓர் அச்சுயந்திர ஸ்தாபனத்திற்கு 50 வயதிற்கு மேற்பட்டவராகவும், கணக்கு எழுதக்கூடியவராகவும், தொழிலை நன்கு நிர்வகிக்கக்கூடிய ஆற்றல் உள்ளவராகவும், தமிழ் ஆங்கிலம் தெரிந்தவராகவும் பிணைப் பணம் செலுத்தக் கூடியவ்ராகவும் ஓர் மனேஜர் தேவை. விபரங்களுக்கு நேரில். ஆசிரியை, இல. 4, குமாரவீதி, முத்திரைச் சந்தையடி, நல்லூர், யாழ்ப்பாணம். 1054

ஐஸ்பழம் தயாரிப்பதற்கு ஒருவரும், அதை விநியோகம் செய்வதற்கு இரு ஆட்களும் தேவை. தொடர்புகொள்ளவும். ஸ்ரீ அம்மாள் ஸ்ரோர்ஸ், காங்கேசன் துறை. 1056

### விற்பனைக்கு

நல்ல நிலைமையில் உள்ள 2 ஸ்ரீ பன்டம் சுப்பர் மோட்டார் சயிக்கிள் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு ஆனந்தா அச்சகம், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1055

எம்மிடம் பலரக முந்திரிகைச் செடிகள் விற்பனைக்குண்டு. செமிலோன் சிகப்பு, இசைப்பிலா வெள்ளை, அவுஸ்திரேலியன் விருட்டி ஆகிய ரகங்கள் உண்டு. சி. சபாரெத்தினம், 20, சர்பத்கடை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1048

யாழ்ப்பாணத்தில்- சிறந்த அயலில், சகல வசதிகளுடன் எட்டுப்பரப்புக்காணி விற்பனைக்கு இருக்கிறது. ஒரு பரப்பின் விலை-ஐயாயிரம். பாகுபாடின்றி எவரும் வாங்கலாம். அரைவாசியும் கிடைக்கும். மனுச்செய்க:- விளம்பர இல. 1052, ஈழநாடு மேர்ப்பார்த்து, யாழ்ப்பாணம். 1052


## இந்திய உல்லாசப் பிரயாணிகள்

பெர்லின், செப். 21

இந்தியாவிலிருந்து ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளின் தொகை அதிகரித்துவருவதை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு வெளிவிவகார இலாகா உயர்தர அதிகாரியொருவர் வரவேற்றார். இதனால் இருநாடுகளிடையே உறவு பலப்படுமென அவர் கூறினார். அனுபவங்களை பரிமாறிக்கொள்ளவும், பல்வேறு விஷயங்களைக் கற்றுக்கொள்ளவும், இந்தியாவுக்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு தூதுகோஷ்டிகளையும், பிரபலஸ்தர்களையும் அனுப்பிவைக்குமென அவர் தெரிவித்தார்.

## சிங்கப்பூர் மந்திரிக்கு பிராமண குரு சங்க மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

சிங்கப்பூரில் ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலயத்துக்கு ஒரு தராதரம் பெற்ற பிராமண அர்ச்சகரும் உதவி அர்ச்சகரும் நியமிப்பதற்கு இலங்கையில் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டது சம்பந்தமாக அகில பிராமண குரு சமூக சேவா சங்கக் காரியதரிசி சிங்கப்பூர் சமூகசேவா மந்திரிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

1958ம் ஆண்டிலும் இதுபோலவே விளம்பரம் செய்து அர்ச்சகராக நியமிக்கப்பட்ட தெல்லிப்பழையைச் சேர்ந்த சிவசுப்பிரமணிய ஐயரை, முதலிற் கூறிய நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, ஆலய உபயங்களிலும் வெளியில் அவர் செய்துவைக்கும் புரோகித வருமானங்களிலும் ஆலய பரிபாலன சபைக்கு ஒரு பங்கு கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தியும் கஷ்டப்படுத்தியும் வந்ததையும் தகுந்த காரணங்களின்றி அவரை நீக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டி, மந்திரி இதுபற்றி விசாரணை செய்ய வேண்டுமென்றும் அது முடியும்வரை வேலை நீக்க அறிவித்தலைநிறுத்திவைக்கும்படி ஆலய பரிபாலன சபைக்கு உத்தரவிடவேண்டுமென்றும் மேற்படி சங்கம் கேட்டுள்ளது.

## பெண்களுக்குச் சமத்துவம்

பெர்லின், செப். 21

சமுதாயத்தில் பெண்களுக்கு முழு அந்தஸ்தும் வழங்குவதற்காகச் சட்டங்கள் பல ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் இயற்றப்பட்டுள்ளன. இதுபற்றிய தகவல்கள் ஐ. நா. பொருளாதாரசமுதாய சபைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. தாயையும், சேயையும் பாதுகாக்க ஒரு சட்டம், பிரசவ வசதிகளும், முழுச் சம்பளத்துடன் பிரசவகால விடுமுறை வழங்க மற்றொரு சட்டம், குழந்தை வளர்ப்புக் கல்வி பற்றிப் பிறிதொரு சட்டம் இப்படி இன்னும் பல சட்டங்கள் மாதர் உரிமைகளை இங்கு பாதுகாத்துவருகின்றன. சம வேலைக்குச் சமசம்பளம் வழங்கவும் ஒரு சட்டம் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சீனு தாக்கினுல் சகல சாதனங்களுடனும்எதிர்ப்போம்"

## சாஸ்திரி மீண்டும் உறுதி

புதுடில்லி, செப். 20

"எமது எல்லையில் சீன ஆக்கிரமிப்பு எதுவும் நடைபெறுமானுல், அதை இந்தியா தனது சகல சாதனங்களையும் உபயோகித்து எதிர்த்து நிற்கும்" என பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி லோகசபையில் பலத்த கரகோஷத்தினிடையே அறிவித்தார்.

''வேற்றுமைகளை அமைதி வழியில் தீர்த்துக்கொள்ளலாம் என்ற கொள்கையை இந்தியா இன்னும் பற்றிநிற்கிறது. சீனுவின் எச்சரிக்கை கெடுவுக்கு இன்னும் காலம் இருந்தபோதிலும், சீனத் துருப்புக்கள் நம் நிலைகள் மீது சுட ஆரம்பித்திருப்பதிலிருந்து. அந்தநாட்டின் வலுத்தாக்குதல் நோக்கம் நன்குபிரதிபலிக்கிறது'' என்ருர் சாஸ்திரி

''உண்மை, அல்லது கற்பனையான புகாருக்குப் பரிகாரத்தை சீனு விரும்பவில்லை. வலுத்தாக்குதல் தான் அதன் நோக்கம். இந்தத்தடவை பாகிஸ்தானுடன் சேர்ந்து இந்தியாவைத் தாக்குவதே அதன் உத்தேசம் எனத் தெரிகிறது.

அவகாசம் தேடவும் பாதுகாப்பு சபை தீர்மானத்தின் விளைவை அறியவுமே சீனு தனது எச்சரிக்கையை மேலும் 3 நாட்கள் நீடித்தது எனக்கருதுகிறேன் சீனுவின் குற்றச்சாட்டு உண்மையாகஇருந்தாலும்கூட அதற்காக படைபலப் பிரயோகம் நியாயமாகாது.

சீனப் பிரதேசத்திற்குள் நமது காவல் நிலைகள் இருந்தால் சீனுவே அதை அகற்றிவிடலாம். அதற்குத்தடை இல்லை. நாம் அகற்றுவதாய் இருந்தால் சீனப் பிரதேசத்திற்குள் சென்று தான் அவற்றை அகற்றவேண்டும். கால் நடைகளை கடத்திச் சென்ற காரணத்திற்காக ஒரு அரசாங்கம் மற்ருேர் அரசாங்கத்தை மிரட்டுவது என்பது அர்த்தமற்றது.

பாரதம் தான் ஆசிய நாடுகளை மிரட்டி, வெருட்டிவருவதாகவும், ஆசிய நாடுகளுக்கு தானே பாதுகாவலன் என்றும் சீனு கருதி செயலாற்றிவருகிறது. ஆனுல் ஒவ்வொரு ஆசிய நாடும் அது பெரியதோ, சிறியதோ பலம்வாய்ந்ததோ அல்லது பலவீனமானதோ எதுவாயினும் தனது சுதந்திரத்தை பாதுகாக்குமே ஒழிய, சீன ஆதிக்கத்தை எந்தத் தன்மான நாடும் ஏற்காது என்ருர் சாஸ்திரி.

காஷ்மீர்பற்றி நாம் என்ன செய்யவேண்டும், என்ன செய்யக்கூடாது என உத்தரவிடுவதற்கு சீனுவுக்கு உரிமை இல்லை என்றும் திரு. சாஸ்திரி கூறினுர்.

பாதுகாப்பு சபை இயற்றிய தீர்மானத்தின் வாசகம் தமக்குக்கிடைத்திருப்பதாயும் அவர் தெரிவித்தார். இது கவனமாக ஆராயப்பட்டு வருவதாயும், நாளை அது பற்றி அறிக்கை ஒன்றை வெளியிடப் போவதாயும் அவர் தெரிவித்தார்.

ஃ

# சீன எச்சரிக்கைக்குப் பின் கிழக்கில் பாக். படைகுவிப்பு

## இதுவரை 3599 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர்

புதுடில்லி, செப். 20

சீனுவின் இறுதி எச்சரிக்கைக்குப் பிறகு, கிழக்கு பாகிஸ்தான் தனது எல்லையில் பெருமளவு துருப்புக்களைக் குவித்து வருவதாயும் ரங்பூர், ராஜஷாகி, தினேஷ்பூர் ஆகிய இடங்களில் பாகிஸ்தான் புதிய போர் முஸ்தீபு செய்து வருவதாயும் அறிவிக்கப்படுகிறது.

ஹூஸேனிவாலா பகுதியில் 2 பாகிஸ்தானிய ஷெர்மான் டாங்கிகளை இன்று இந்தியா கைப்பற்றியதாயும், அங்கு திடீர் தாக்குதல் நடத்தி பாகிஸ்தானியருக்கு பலத்த சேதம் விளைவித்ததாயும் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்காவில் சென்பாங்ஸ் தேவாலயத்தின்மீது பாகிஸ்தான் இரண்டு, 1000 ராத்தல் குண்டுகளைப் போட்டதில் மண்டபமும், சுற்று மதில்களும் தரை மட்டமாகியதாயும் அறிவிக்கப்பட்டது. தேவாலயத்தின் தலைமைக் குரு இது பற்றி வேதனை அடைந்ததாயும் இந்த நஷ்டம் ஈடு செய்ய முடியாதது என அமிர்தசரஸ் பிஷப் கூறியதாயும் கூறப்பட்டது.

இந்தோ பாகிஸ்தான் சண்டையில் இதுவரை 22 அதிகாரிகள் உட்பட 3599 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டதாயும், 391 டாங்கிகள் அழிக்கப்பட்டதாயும் டில்லியில் அதிகாரி ஒருவர் கூறினுர். இவற்றில் 222 பேட்டன் டாங்கிகள்.

64 பாகிஸ்தான் வியானங்கள் அழிக்கப்பட்டன. தரையில் அழிக்கப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை இதில் அடங்கவில்லை.

12 பாகிஸ்தானிய அதிகாரிகள் உட்பட 443 பேர் சிறைபிடிக்கப்பட்டனர்.

இந்தியா 100 டாங்கிகளையும், 32 விமானங்களையும் இழந்தது. 64 அதிகாரிகள் உட்பட 974 இந்தியர்கள் மாண்டனர்.

இதற்கிடையில், பாகிஸ்தான் அமெரிக்கஆயுதங்களை உபயோகிப்பதை தன்னுல் கட்டுப்படுத்த முடியவில்லை என அமெரிக்கா அறிவித்திருப்பதாய் லோகசபையில் தெரிவிக்கப்பட்டது.

---

துணுக்காய், திங்கள்

துணுக்காய் உப தபால் நிலைய அதிபர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். தபால் பகுதிக் கணக்குப் பொறுப்பாளர் நடத்திய பரிசோதனையைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

# சாகவேண்டு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அணிந்திருந்த காளிமுத்து, நெற்றியில் சந்தனப்பொட்டும் இட்டிருந்தார். டாக்டர்கள் சாட்சியமளித்த போது காளிமுத்து கைகளை கூண்டில் பிடித்தபடி பார்த்துக்கொண்டிருந்தார்.

காயபடைந்த திருமதி தேவராஜனை ப்பரிசோதித்த டாக்டர் தவரத்தினம் சாட்சியமளித்தபின், நீதிபதி எதிரியைப்பார்த்துகுறுக்குக் கேள்வி கேட்க விரும்புகிறீரா( என்று கேட்டார். எதிரி 'ஆம்' என்று பதிலளித்துவிட்டு, 'எனது அடிகளால் எல்லாக்காயங்களும் ஏற்பட்டதா' என்று கேட்டார். இதற்கு பதிலளித்த டாக்டர் மண்டையில் மாத்திரம் 4 அடி பட்டிருப்பதாகவும், கையிலும் அடிபட்டிருப்பதாகவும் கூறினுர். வேறு கேள்வி கேட்கவிரும்புகிறீரா? என்று நீதிபதி கேட்டதும்' அவ்வளவுதான் என எதிரி பதலளித்தார்.

டாக்டர் சிதம்பரப்பிள்ளை சாட்சியமளித்தபோது, காலஞ்சென்ற திருமதி மார்த்தாண்டனின்மண்டை உடைந்திருந்ததாகவும் ஆகக்குறைந்தது 3 அடி விழுந்திருக்க வேண்டுமென்றும், அதனுல் மண்டை சிதறியிருந்ததென்றும்கூறினுர்.

நீதிபதி கேட்ட கேள்வியொன்றிற்கு காலஞ்சென்றவரின் உடலில் 17 காயங்கள் இருந்ததாக டாக்டர் கூறினுர்.

எதிரியைப்பார்த்து கேள்விகேட்க விடுப்புகிறீரா? என்று கேட்டதும், ''நான் சாகவேணுமென்று அடிக்கவில்லை'' என அவர் கூறினுர் அதன்பின் வேறு கேள்விகேட்கவில்லையென்றும் கூறினுர்.

விசாரணையை அடுத்த மாதம் 5-ந் தேதி வரைஒத்திவைத்து, எதிரியை ரிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உட்தரவிட்டார்.

---

புதுடில்லி, செப். 20

பாகிஸ்தானின் தாக்குதலுக்கு இலக்காகி மாண்ட முன்னுள் குஜராத் முதல் மந்திரியின் ஸ்தானத்தில் உள்நாட்டு மந்திரி திரு. ஹிதேந்திரநாத் தேசாய் தலைமையில் பராமரிப்பு அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.


## யாழ்ப்பாணக்கல்லூரி

பட்டதாரி மாணவர் பகுதி

பொ. க. த. G. A. Q. | பொ. வி. த. G. S. Q.

(வெளிவாரி)

1966 ஆம் ஆண்டுப் பரீட்சைக்குரிய போதனை வகுப்புகள் ஐப்பசிமாதத்தொடக்கத்தில் ஆரம்பமாகும். குறிப்பிட்ட கல்வித்துறைக்கு விதிமுறை செய்யப்பட்ட பிரகாரம் க. பொ. த. ப. (சா. த.) தகுதிகளும் அத்துடன்:

1. உ. த. ப. (H. S. C.) பரீட்சையில் சித்தியெய்தியவர்கள்.

அல்லது

2. 1964 ஆம் ஆண்டு க. பொ. த. ப. (உ. த.) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியெய்தியவர்கள் மேற்படி வகுப்புகளில் சேரலாம்.

விபரப் பிரகடனமும்விண்ணப்பப் பத்திரமும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்,

விண்ணப்பங்கள் 27-9-65-ல் முடிவடையும்.

பதிவாளர்

வட்டுக்கோட்டை. 860

## விற்பனைக்கு

இரு பெட்போர்ட் வான்கள் (1 ஸ்ரீ 791, 33 ஸ்ரீ 1865 இலக்க முடையவை) ஒரு அட்லஸ் பிரயாணிகள் வான் (4 ஸ்ரீ 1088 இலக்க முடையது) விற்பனைக்குண்டு. [illegible] பனி லிமிட்டெட், பரந்தன்.


# சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சென்ற ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ள சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரம் சம்பந்தமாக யாழ்ப்பாணக் காரியாதிகாரி திரு. சிவஞானம் சகல காரியாதிகாரிகளுக்கும் தெரிவித்துள்ள செய்தியில் இந்த நோக்கத்தை நன்கு பிரசாரப்படுத்த உதவுமாறு கேட்டுள்ளார். சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு கமிட்டியினுல் பல துண்டுப்பிரசுரங்களும், போஸ்டர்களும் வெளியிடப்பட்டுள்ளன. பல கார்களில் கண்ணுடிகளில் இந்தப் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுக் காணப்படுகின்றன. பல பொதுக் கூட்டங்களும் இதையொட்டி இந்த வாரத்தில் நடத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

# மலேரியா ஒழிப்பு

சுழிபுரம், திங்கள்

மலேரியா ஒழிப்பு இயக்க உத்தியோகஸ்தர்கள் சுழிபுரம் பகுதியில் மலேரியா ஒழிப்பு மருந்துகள் தெளிப்பதில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை பகுதியைச் சேர்ந்த அரைமைல் விஸ்தீரணம்உள்ள இடத்துக்கு சுமார் இருபது உத்தியோகஸ்தர்கள் இன்று மருந்து தெளித்தனர்.


Estd: 1929 **S. R. S.** போன்: 296

## ஜவுளி மாளிகை

தீபாவளி பண்டிகைக்காக

எல்லாவிதமான

**ஜவுளித் தினிசுகளும்**

ஏராளமாக வரவழைத்திருக்கிருேம்

உங்கள் தேவைகளுக்கு

முன்கூட்டியே தெரிவு செய்யுங்கள்!

எமது சொந்த தறிகளில் தயார் செய்த

கைத்தறி சேலைகளும்,

பரமாஸ் வேட்டி சால்வைகளும்

விற்பனைக்குத் தயாராக இருக்கிறது.

**எஸ். ஆர். செல்லத்துரை**

216, கே. கே. எஸ். ரேட், — யாழ்ப்பாணம்.


# சிறுகதை, கவிதைப் போட்டி

## சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரத்தையொட்டி ஈழநாடு அளிக்கும் வாய்ப்பு

19-9-65-முதல் 25-9-65 வரை நடைபெறும் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரத்தின் ஓர் அங்கமாக சிறுகதை, கவிதைப் போட்டியை நடத்துவதற்கு சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரக்குழு ஒழுங்குசெய்துள்ளது.

### நிபந்தனைகள்

(1) இப்போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகளும், கவிதைகளும் சமூகத்தில் வித்தியாசத்தால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்கும் கருத்துடையனவாக இருக்கவேண்டும்.

(2) போட்டிக்குரிய கதைகளும், கவிதைகளும் 24-9-65-ந் திகதிக்கு முன்னர் **சிறுகதை, கவிதைப் போட்டி, ஆசிரியர், ஈழநாடு, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்** என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

(3) இப்போட்டியின் முடிவு சம்பந்தமாக ஈழநாடு ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

(4) சிறுகதையும், கவிதையும் தனிப்பட்ட எவரையும் தாக்குவதாக இருக்கக்கூடாது.

### பரிசுகள்

பரிசுக்குரிய சிறுகதைக்கு 50 ரூபாய் பெறுமதியான தமிழ் நூல்களும், பரிசுக்குரிய கவிதைக்கு 50 ரூபாய் பெறுமதியான தமிழ் நூல்களும் வழங்கப்படும்

போட்டியில் தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று சிறுகதைகளும், கவிதைகளும் ஈழநாடு வாரப்பதிப்பில் பிரசுரிக்கப்படும்.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் பின்வரும் கூப்பனை நிரப்பி தாம் அனுப்பும் சிறுகதை, கவிதையுடன் அனுப்பவேண்டும்.

---

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு

சிறுகதை, கவிதைப் போட்டி

பெயர்: ______________________

விலாசம்; ______________________

கதை / கவிதை (தலைப்பு)

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org